## சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பகுதிகளில் போஷணைப் பிணியாய்வு நிலையங்களை நிறுவுதல் மீதான வழிகாட்டி

### 1. அறிமுகம்

தாய் -சேய் போாஷக்கானது தேசிய தாய்-சேய் நலன் வேலைத்திட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு பகுதியாகும். இந்த இலக்குக் குழுவினா்க்குரிய போஷாக்கிற்கான தேசியமட்ட தலையீடுகள் முக்கியமாக சுகாதார வைத்திய உத்தியோகத்தரினால் பொதுச்சுகாதார அலுவலா்கள் மூலம் வெளிக்களத்திலும் தாய்-சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன. இருப்பினும் மனித வளப பற்றாக்குறை போன்ற தடைகளால் சுகாதார அலுவலா்கள் போதிய நேரத்தை போஷாக்கு பற்றிய உளவளத்துணைச் செயற்பாடுகளுக்காக செலவழிப்பதில் சிரமப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (விசேடமாக, ஒருங்கிணைந்த/பல்வகைப் பிணியாய்வு நிலையங்களில்- Combined &Poly Clinics)

அதனால்,போஷாக்கு சம்பந்தமான விசேட பிணியாய்வு நிலையத்தின் தேவை உணரப்பட்டது. குறிப்பாக தனிநபா் மட்டத்தில் இலக்குக் குறித்த தலையீடுகளை,(ஒவ்வொருவரினதும் தனித்தனிப் பிரச்சனைகளை சரியாக அடையாளம் காணல், குறிப்பான வழிகாட்டல்கள், திட்டமிடல் மற்றும் பொருத்தமான தலையீடுகளை செயலாக்குதல்). சுகாதார வைத்திய உத்தியோகத்தரால்/மேலதிக சுகாதாரவைத்திய உத்தியோகத்தரால் தெரிவுசெய்யப்பட்ட சேவைபெறுநருக்கு செயற்படுத்துவதற்காகும். இவ்வகையில் போஷணைப் பிணியாய்வு நிலையங்களை நிறுவுதல் மூலம் ஒவ்வொரு தனித்த சேவை பெறுநருக்குமுள்ள போஷணைப் பிரச்சனைகளை இன்னும் சிறப்பாக இலக்கு குறித்த, பயனுறுதியுள்ள வகையில் கையாளலாம் என நம்பப்படுகிறது.

இந்த ஆவணம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பகுதிகளில் போஷணைப் பிணியாய்வு நிலையமொன்றை நிறுவுதல் மற்றும் அதனை நடாத்துதல் மீதான ஒரு வழிகாட்டியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2. போஷணைப்பிணியாய்வு நிலையத்தின் அமைவிடம் மற்றும் நடாத்தப்படும் வேளைகளின் எண்ணிக்கை

மொத்த நிலப்பரப்பு, சுற்றாடல்(Terrain), சு.வை.உ. பிரிவின் சனத்தொகை மற்றும் எதிர்பார்க்கப்படும் சேவை பெறுநர்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் போஷணைப் பிணியாய்வு நிலையம் நடாத்தப்பட வேண்டிய வேளைகளின் எண்ணிக்கை மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவில் அதன் அமைவிடம் என்பன சுகாதார வைத்திய உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆகியோரால் தீர்மானிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு சு.வை.உ. பிரிவிலும் குறைந்தது மாதத்துக்கு ஒரு வேளையாவது நடாத்தப்படுவதோடு இது ஒரு விசேட பிணியாய்வு நிலையமாக நடாத்தப்பட வேண்டும் இதுவே -கா்ப்பிணித்தாய்மாா் மற்றும் 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு ஒரு தினமும், பாடசாலை வயதுப் பிள்ளைகள் மற்றும் புதிதாய் மணம் முடித்த தம்பதியா்களுக்கு மற்றோா் தினமுமாக மாதத்துக்கு இரண்டு தடவைகள் நடாத்தப்படமுடியுமாயின் இன்னும் பெறுமதியான சேவையை வழங்கமுடியும்.

- சேவை பெறுநா்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, போஷாக்கு பிணியாய்வு நிலைய வேளையொன்றுக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தை மேற்பார்வை உத்தியோகத்தா்கள் தீா்மானிக்க வேண்டும்.

- ஒரு பிற்பகல் வேளை மிக விரும்பத்தக்கது: எனினும் ஒரு குறிக்கப்பட்ட சு.வை.உ. பிரிவிற்கு மட்டும் உரியதான காரணிகளின் அடிப்படையில், மாவட்ட மேற்பார்வை உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் பிணியாய்வு நிலையம் காலை வேளையிலும் நடாத்தப்படலாம்.
- முன்னரே தயாரிக்கப்பட்ட திட்டத்துக்கமைய சந்திக்க வேண்டிய நேரத்தை, அதற்கானநேர ஒதுக்கீடு நியமிக்கும் தினத்திலேயே சேவை பெறுநருக்கு கூறிவைக்க வேண்டும். (உம்: குழந்தைகளும் பிள்ளைகளும்-பி.ப.1.00 மணி: கர்ப்பிணிப் பெண்கள்- பி.ப. 2.00 மணி: பாடசாலை வயதுச் சிறார்கள்-பி.ப.3.00 மணி போன்றவை)மேற்பார்வை உத்தியோகத்தர்கள் இதனை நன்கு திட்டமிட்டு அளவுக்கதிகமான சேவை பெறுநர்கள் ஒரே தினத்தில் குழுமி அசௌகரியப்படாத வகையில் நேர ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும்.

## 3. போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைத்தல்

### 3.1 உள்ளூர் தாய்சேய் நலன்பேண் / கர்ப்பத்திற்கு முந்திய, பிணியாய்வு நிலையங்களிலிருந்து போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைத்தல்

இணைப்பு 1 இல் உள்ளூர் தாய்சேய் நலன்பேண் /கர்ப்பத்தின்முன் பிணியாய்வு நிலையங்களில் இருந்து போஷணைப் பிணியாய் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டிய போஷணைப் பிரச்சனைகள் குறிப்படப்பட்டுள்ளன். உள்ளூர் தாய்சேய் நலன்பேண் /கர்ப்பத்தின் முன் பிணியாய்வு நிலையங்களில் போஷணைப் பிரச்சனைகள் கையாள்வது சிரமமாயிருப்பின் அல்லது முன்னேற்ற முடியாமல் போகுமாயின் மட்டுமே போஷணைப் பிணியாய்வு நியைத்திற்கு மேலதிக கவனிப்புக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும் (அட்டவணை 1 ஐப் பார்க்க)

**அட்டவணை 1**

**உள்ளூர் தாய்சேய் நலன்பேண் /கர்ப்பத்தின் முன் பிணியாய்வு நிலையங்களில் இருந்து போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டியவர்கள்**

| **இலக்கு குழு** | **யாரை அனுப்ப வேண்டும்** | **தொடர்புடைய இணைப்பு** |
|---|---|---|
| 1 -5 வயதுடைய குழந்தைகளும் பிள்ளைகளும | உள்ளூர் தாய்சேய் நலன்பேண் பிணியாய் நியைத்தில் கையாளப்பட்ட தலையீடுகள் வெற்றிபெறாத / கையாள்தல் சிரமமாகவுள்ள போஷணைப் பிரச்சனையுடைய பிள்ளைகள் * | மேலதிக விபரங்களுக்கு இணைப்பு 1 ஐப் பார்க்க் |
| பாடசாலை பிள்ளைகள் | பாடசாலை வைத்தியப் பரிசோதனையின்போது போஷணைப் பிரச்சனையுடையதாக அடையாளம் காணப்பட்டு, சுகநலப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் தோல்வி அடைந்த/கையாள்தல் சிரமமாகவுள்ள பிள்ளைகள் ** | |

| | | |
|---|---|---|
| பாடசாலை செல்லாத பாடசாலை வயதுப் பிள்ளைகள் (5-19) | வெளிக்களத்தில், போஷணைப் பிரச்சனை உடையதாக இனம்காணப்பட்டு, சுகநலப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் தோல்வி அடைந்த/ கையாள்தல் சிரமமாகவுள்ள பிள்ளைகள் ** | |
| புதிதாய் மணம்முடித்த தம்பதிகள் | உள்ளூரிலுள்ள கர்ப்பத்தின்முன் பிணியாய் நிலையங்களில் பேஷாணைப் பிரச்சனை உடையதாக அடையாளம் காணப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் தோல்வி அடைந்த/ கையாள்தல் சிரமமாகவுள்ள, புதிதாய் மணம்முடித்த பெண்கள்/ ஆண்கள் ஆகியோர். | |
| கர்ப்பிணித் தாய்மார்களும் பாலூட்டும் தாய்மார்களும் | உள்ளூரிலுள்ள கர்ப்பத்தின் முன் /கர்ப்பத்தின் பின் பிணியாய்வு நிலையங்களில் போஷணைப் பிரச்சனை உடையதாக இனம் காணப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் தோல்வி அடைந்த/ கையாள்தல் சிரமமாகவுள்ள தாய்மார். | |


*தாய்ப்பாலூட்டல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் - ஏதாவது பிரச்சனைகள் பொ.சு.ம.மாதீனால் தீர்க்கப்படமுடியாததாயிருப்பின் உடனடியாக குறித்த பிரச்சனைக்கு தேவைப்பட்டபடி அருகிலுள்ள பாலூட்டல் முகாமைத்துவ நிலையத்திற்கு அல்லது சு.வை.உ. /மேலதிக சு.வை. உ. க்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**5 வயதுக்கு கூடிய,கடுமையான தீவிர போஷணைக் குறைவுள்ள (SAM) அல்லது அளவுக்கதிகமான பருமன் (Obesity) (நீளம் /உயரத்துக்குரிய நிறை>+ 3SD), உ.தி.சு. (BMI) <17 அல்லது ,30 ஆகவுள்ள மற்றும் தீவிர இரத்தச்சோகை இருப்பதாக சந்தேகிக்கப்படும் 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள், ஒரு வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு மேலதிக கவனிப்புக்கு விசேட வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைப்பதற்காக, அண்மைத் திகதியில் நடக்கவுள்ள ஏதாவதொரு பிணியாய்வு நிலையத்திற்கு (தாய்சேய் / கர்ப்பத்தின் முன் / போஷணை பிணியாய்வு நிலையத்திற்கு) அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**3.2 போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைத்தல்**

**அனுப்பி வைக்கும் படிமுறை ஒழுங்குகள் பினவரும் படம் 1 இல் தரப்படுகிறது:**

**படம் 1- போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கும் படிமுறை ஒழுங்கு**




- பொ.சு.ம.மாதினால் வெளிக்களத்தில் அடையாளம் காணப்பட்ட எல்லா பிரச்சனைகளுக்கும் மற்றும் பொ.சு.பரிசோதகரினால் பாடசாலை மருத்துவ பரிசோனைக்கு தயார்படுத்தும்போது/வெளிக்களத்தில், அடையாளம் காணப்பட்ட எல்லா

பிரச்சனைகளுக்கும் அவ்வப்போதே திணைக்கள சுற்றுநிரூபங்கள்/ ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தயீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். போஷணைப் பிரச்சனையுள்ள பாடசாலைப் பிள்ளைகள் பாடசாலை மருத்துவப் பரிசோதனை செய்யும் மருத்துவ உத்தியோகத்தரிடம் அனுப்பப்படவேண்டும்

- தொடர் கண்காணிப்பின்போது இந்த போஷாக்குப் பிரச்சனைகளில் திருப்திகரமான முன்னேற்றம் ஏதும் காணப்படாதவிடத்து அப்படியான சேவை பெறுநர் உள்ளூர் தாய்சேய் /கர்ப்பத்தின்முன் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களுக்கு மருத்துவ ஆலோசனை.'. தலையீடுகளுக்காக அனுப்பி வைக்கப்படவேண்டும். வேறு சு.வை.உ. பிரிவில் வதியும் பிள்ளைகள் விடயத்தில், பிள்ளை/பெற்றோரின் வசதி கருதி அவர்களுக்குரிய சு.வை.உ பிரிவில் உள்ள பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- உள்ளூர் தாய்சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களில் மருத்துவ உத்தியோகத்தர் தேவையான தயீடுகளை சேவை பெறுநர்களுக்காக மேற்கொள்வார்.(அத்துடன்/அல்லது விசேட மருத்துவ சேவைக்கு, வேறு உளவளத்துணைச் செயல்பாட்டிற்கு மற்றும், சமூக நலன்புரி நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பார்). அத்தோடு எவ்வாறு இவர்களது தொடர் கண்காணிப்பு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதை வெளிக்கள அலுவலர்களுக்கு அறிவிப்பார். அவ்வாறே வெளிக்கள அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு செய்து தலையீடுகளின் வெற்றி பற்றி மதிப்பிட்டு மேலதிக தலையீடுகள் தேவைப்படுமாயின் உள்ளூர் தாய்சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களுக்கு திரும்பவும் அனுப்பி வைப்பார்கள்.

- உள்ளூர் தாய்சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களில் மருத்துவ உத்தியோகத்தர் உள்ளூர் பிணியாய்வு நிலையத்தில் வைத்து தலையீடுகள் மேற்கொள்வது சிரமமென்றோ அன்றி இதுவரை மேற்கொண்ட தலையீடுகள் போஷணைப் பிரச்சனையைத் தீர்ப்பதில் தோல்வியுற்றதாகவோ கருதினால், அத்தகைய சேவைபெறுநர் <u>மட்டும்</u> போஷணைப்பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.உள்ளூர் தாய்சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களிலிருந்து போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியவர்களை இணைப்பு 1 இல் காண்க.

- ஒரு சேவை பெறுநரை போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு அனுப்பும்பொழுது, முக்கிய விடயங்களான இனங்காணப்பட்ட பிரச்சனை அதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள், தேவைப்படக்கூடிய, சேவைபெறுநர் பற்றிய பின்புல விபரங்கள் கொண்ட (6 முக்கிய கவனிப்பு பழக்கங்கள் அடங்கலாக )ஒருசிறு சாராம்சக்

குறிப்பு, மற்றும் அனுப்பும் காரணம் பற்றிய கடிதம்:- பிள்ளையொன்றின் விடயத்தில் பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் பக்கங்களைக் குறிப்பிட்டு விடயத்தை அறியத்தரல்- இவற்றோடு அனுப்பி வைக்கவும்.

(* 6 முக்கிய கரிசனைப் பழக்கங்கள்- உணவு ஊட்டல் பழக்கங்கள்,உணவு சமைத்தல் மற்றும் பாதுகாப்பாக வைத்தல் சார்ந்த பழக்கங்கள், சுத்தம் மற்றும் சுகாதாரப் பழக்கங்கள், உள சமூக அபிவிருத்தி சார்ந்த பழக்கங்கள், பெண் பிள்ளைகள், பெண்கள் ஆகியோருக்கு உரிய கவனம் வழங்கப்படல்--- மேலதிக விபரங்களுக்கு இணைப்பு 2 ஐப் பார்க்க)

## 4. போஷணைப்பிணியாய்வு நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்

போஷணைப்பிணியாய்வு நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளின் சாராம்சம் அட்டவணை 3ல் தரப்படுகிறது. மேலதிக தேவைகட்கு பகுதிகள்4.1 இலிருந்து 4.11 வரை பார்க்கவும்.

**அட்டவணை 3**

**போ'ணைப்பிணியாய் நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்**

| | **செயற்பாடு** | **பொறுப்பு** |
|---|---|---|
| **4.1** | இலக்கங்கள் வழங்குதல்<br>பதிவு செய்தல் | பொ.சு.ம./பொ.சு.ப. |
| **4.2** | பதிவுகள் பேணல் (பிணியாய்வு நிலைய வரவுப்பதிவேடு-ர் 517) போஷணைப்பிணியாய்வு நிலைய பதிவேடு, சேவைபெறுநரின் குறிப்புப்புத்தகம் போன்றவை | பொ.சு.ம./பொ.சு.ப |
| **4.3** | போஷணை மதிப்பீட்டுக்காக உரிய அளவீடுகளை எடுத்தலும் அவற்றைப்பதிவு செய்தலும் -நிறை,நீள/உயரங்களை அளவெடுத்தல், உடற்திணிவுச் சுட்டியைக் கணித்தல், வளர்ச்சிப்பதிவேட்டில் அளவீடுகளை குறித்தலும் தொடர்பான குறிப்புகளை செய்தலும் (உம்-CHDR, கர்ப்பிணிப் பதிவுக் குறிப்பு, சேவைபெறுநரின் கர்ப்பத்தின்முன் பராமரிப்பு அட்டை, பாடசாலை சுகநல அட்டை, சேவைபெறுநரின் பிணியாய்வு நிலைய குறிப்பேடு போன்றவை) | பொ.சு.ம./பொ.சு.ப |
| **4.4** | பிணியாய்வு நிலையத்துக்கு முதல் வருகையின்போது நோய்களைக் கண்டறிவதற்காக மருத்துவ பரிசோதனை (அத்துடன் அடுத்துவரும் வருகைகளில், தேவைக்கேற்ப) | சு.வை.உ./மே.சு.வை.உ |
| | முதல் பிணியாய்வு நிலைய வருகையின்போது,<br>- பிரச்சனையை சரியாக இனம்காணல்<br>- விபரமான வரலாறு (அத்துடன், கடந்த 24 | |

| | | |
|---|---|---|
| | மணித்தியால உணவு நுகர்வு மீளாய்வு, உணவுப் பாதுகாப்பு, 6 முக்கிய கரிசனைப் பழக்கங்கள்)<br>- போஷணைச் சுட்டிகளை விளங்கிக்கொள்ளல்<br>- FBC, Hb போன்ற மற்றும் ஏனைய தொடர்பான நோய் ஆய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்தல்<br>- எவ்வகையான தலையீடு தேவைப்படுமென்பதைத் தீர்மானித்து, அந்த தலையீடுகளை மேற்கொள்ளல் (உளவளத்துணை அடங்கலாக), தேவைப்படும் தொடர்கண்காணிப்பின் வகையைத் தீர்மானித்து உரிய குறிப்புகளை எழுதுதல்<br>- தேவைக்கேற்ற விசேட மருத்துவ சேவைக்காக குறிப்பிட்டு அனுப்புதல்<br>- தேவைப்படும் போது தேவைப்படும் வகையில் மருத்துவ சிகிச்சையை குறித்து எழுதுதல்<br>- அடுத்த பிணியாய்வு நிலையத்துக்கு வருகை தரவேண்டிய திகதி மற்றும் எதிர்கால முகாமைத்துவ திட்டங்களை தீர்மானித்தல் , வெளிக்கள தொடர் கண்காணிப்பு செயல்படுத்தப்பட வேண்டியது எவ்வாறு என்பது பற்றி உரிய குறிப்புகளை இடுதல்.<br>- வெளிக்கள தொடர் கண்காணிப்பு ஒழுங்கு செய்ய உரிய பகுதி பொ.சு.ம./பொ.சு.ப. க்கு அறிவிப்பதற்காக சேவைபெறுநரை பொதுச் சுகாதார தாதி சகோதரியை (PHNS) ஐச் சந்திக்க அனுப்புதல்.(அல்லது PHNS இல்லாதவிடத்து மே.பொ.சு.ம.மாது)<br>- அதற்கடுத்த தடவை பிணியாய்வு நிலைய வருகையின்போதும் தேவைப்படுமாயின் இந்த செயற்பாடுகள் அனைத்தும் மேற்குறித்த வகையில் நிகழ்தல்வேண்டும். | |
| **4.5** | பிணியாய்வு நிலைய மீள்வருகைகளின் போது தொடர் கண்காணிப்பு<br>- முதல் வருகையின்போது மேற்கொண்ட தலையீடுகளின் விளைவு பற்றி மதிப்பிடல் | சு.வை.உ. / மே.சு.வை.உ |

| | | |
|---|---|---|
| | - எவ்வகை முன்னேற்றமும் காணப்படவில்லை எனின் சு,வை.உ. / மே.சு.வை.உ. மீண்டும் அப்பிரச்சனையை மதிப்பீடு செய்து, முகாமைத்துவ திட்டத்தில் ஏற்ற மாற்றங்கள் செய்து அதன்படி நடைமுறைப்படுத்த வேண்டும்.<br><br>- முன்னேற்றம் காணப்படுமாயின் சேவைபெறுநரை தெளிவான அறிவுறுத்தல்களுடன் முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப அடுத்த படிமுறையை மேற்கொள்வதற்காக பொது சுகாதார தாதிச் சகோதரியிடம் அனுப்புக<br>- எப்படி வெளிக்கள தொடர்கண்காணிப்பு நடைபெற வேண்டும் என்பது பற்றிய குறிப்புகளை சேவைபெறுநரின் பிணியாய்வு நிலைய குறிப்புப் புத்தகத்தில் இடுக.<br>- உரிய பொ.சு.ம. / பொ.சு.ப. க்கு அறிவித்தல் மூலம் வெளிக்கள தொடர் கண்காணிப்பை ஒழுங்குபடுத்தல்<br><br>- முன்னேற்றம் அடைந்த / நல்ல முன்னேற்றம் காணப்படுகின்ற சேவைபெறுநர்களை உள்ளூர் தாய்சேய் நலன்பேண்/கர்ப்பத்தின் முன் பிணியாய்வு நிலையங்களில் தொடர்கண்காணிப்புக்காக போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவித்தல், இதுபற்றி விடுவிக்கும்போது அவர்களுக்கு அறிவித்தல். | )<br><br>சு,வை.உ. / மே.சு.வை.உ ஆல் அறிவுறுத்தப்பட்டபடி பொ.சு.தா.ச.(PHNS)<br><br>(பொ.சு.தா.ச. இல்லாதபோது மே.பொ.சு.ம. –SPHM) |
| **4.6** | - மேலதிக போஷணைப் பொருள்களை குறிப்பிட்டபடி வழங்குதல் (திரிபோஷா, நுண்போஷணைப் பதார்தங்கள் ஆகியன) | பொ.சு.ம./பொ.சு.ப. |
| | - குறிக்கப்பட்ட மருந்துகளை வழங்குதலும் மருந்துக்கணக்குப் பதிவேடுகளை சமப்படுத்தலும் | பொ.சு.தா.ச./பொ.சு.ப. |
| **4.7** | - அடுத்த பிணியாய்வு நிலைய வருகைக்கு திகதிகளை நியமித்து வழங்குதல், பொ.சு.ம./பொ.சு.ப. க்கு உரிய வெளிக்கள தலையீடுகள்பற்றி அறிவித்தல் | பொ.சு.ம./பொ.சு.ப. |
| **4.8** | - போஷணை பிணியாய்வு நிலைய பதிவேடு, பிணியாய் நிலைய நடவடிக்கைச் சாராம்சம் என்பன உட்பட | பொ.சு.ம./பொ.சு.ப. |

| | | |
|---|---|---|
| | அனைத்து பதிவேடுகளும் ஒவ்வொரு பிணியாய்வு வேளைகள் முடிந்தவுடனும் அத்தினம் வரைக்கும் நிறைவு செய்யப்படவேண்டும். | |
| | - போஷணை பிணியாய்வு நிலைய தரவுகளை சுகநல முகாமைத்துவ தகவல் முறைமைக்குள் (HMIS) பதிவு செய்தல். | |

**சேவை பெறுநரை பதிவு செய்தல்**

வருகைதரும் அனைத்து சேவை பெறுநர்களும் பிணியாய்வு நிலைய வரவு பதிவேட்டில் (H517) முதலில் பதியப்பட வேண்டும் இதற்கு மேலதிகமாக நிலையத்திலேயே ஒரு போஷணைப் பிணியாய்வு நிலையப் பதிவேடு, வெளிக்கள/பிணியாய்வு நிலைய தொடர் கண்காணிப்புக்காக பேணப்படவேண்டும்.

**போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேடு பின்வரும் விபரங்களுடன் ஒரு CR புத்தகத்தில் பேணப்படவேண்டும் (இணைப்பு 3 ஐப் பார்க்க)**

1- தொடர் இலக்கம்
2- அடையாள இலக்கம்
3- பொ.சு.ம மாதுவின் பகுதி (பாடசாலை /பொ.சு.ப.பகுதி-பாடசாலை செல்லாத பிள்ளைகளுக்காக)
4- பெயர்
5- வயது
6- ஆண்/ பெண்
7- விலாசம் (பிள்ளையாயின், பெற்றார்/பாதுகாவலரின் பெயருடன்)
8- தொலைபேசி எண்
9- அடையாளம் காணப்பட்ட போஷணைப் பிரச்சனைகள்
10- எடுத்த நடவடிக்கை
11- தொடர் கண்காணிப்பு வருகைகள் (பல வருகைகளுக்கு இடம் ஒதுக்குக)
    - அடுத்த வருகைக்கு நியமித்த திகதி, வருகை தந்த திகதி, முன்னேற்றம், எடுத்த நடவடிக்கை

12. விடுவித்த திகதி

பிணியாய்வு நிலையத்திற்கு முதலாவதாக வருகைதரும் திகதியில் 1 இலிருந்து 8 வரையான விபரங்கள் எல்லா சேவை பெறுநர்களுக்கும் நிரப்பப்பட வேண்டும். (மீதி விபரங்கள் 9 இலிருந்து

12 வரையானவை முதல் வருகையுட்பட எல்லா பிணியாய்வு நிலைய வருகையின்போதும், வெளியேறுமுன் நிரப்பப்படவேண்டும்)

**4.1 குறிப்புகள் எடுத்தலும் பதிவு பேணலும் (பிணியாய்வு நிலையத்தில் சேவை பெறுநர்களின் குறிப்புப் புத்தகங்கள்)**

ஒவ்வொரு சேவைபெறுநரதும் அடையாள இலக்கம் சேவை பெறுநர் பதிவுகளில் பதியப்படவேண்டும் உம்: பிள்ளையினது'பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு',கர்ப்பிணிப் பெண்ணொருவரின்'கர்ப்பகாலத் பதிவு அட்டை' போன்றவை.

பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு, கர்ப்பிணிப் பதிவேடு போன்றவற்றில் எல்லா பிணியாய்வு நிலையக் குறிப்புகளும் எழுதுவதற்கு விடப்பட்ட இடைவெளிகள் போதாமையால் அதற்காக தனியானதொரு பதிவுப் புத்தகம் வைக்கப்பட வேண்டும். (ஒரு அப்பியாசக் கொப்பி). இந்தப் புத்தகம் சேவைபெறுநரால் பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு. கர்ப்பிணிகளின் பதிவேடு போன்றவற்றோடு ஒவ்வொரு போஷணைப் பிணியாய்வு நிலைய வருகையின்போதும் கையளிக்கப்படவேண்டும். அதேபோல் வேறு சுகநலச் சேவைகள் பெறும் சந்தர்ப்பங்களிலும் இது கையஷளிக்கப்படவேண்டும.

போஷணைப் பிணியாய்வு நிலையத்தின் முதலாவது நாள் பதிவின்போதே பின்வரும் விபரங்கள் சேவை பெறுநரின் பதிவேட்டில் முதல் பக்கத்தில் பதியப்பட வேண்டும்.

1. தொடர் இலக்கம்
2. அடையாள இலக்கம்
3. பொ.சு.ம.பகுதி (பாடசாலை/பொ.சு.ப.பகுதி - பாடசாலை செல்லாத பாடசாலை வயதுப் பிள்ளைகள் )
4. பெயர்
5. வயது
6. ஆண்/பெண்
7. முகவரி(பிள்ளையாயின் பெற்றார்/பாதுகாவலரின் பெயருடன்)
8. போஷணைப் பிணியாய்வு நிலையத்துக்கு அனுப்பியதற்கான காரணம் (அனுப்பிய கடிதம்/குறிப்பில் உள்ளவாறு)
9. அடையாளம் காணப்பட்ட போஷணைப் பிரச்சனை

12- எடுத்த நடவடிக்கை

**4.2 போஷணைத் தரத்தை சரியாக மதிப்பீடு செய்யும் பொருட்டு உரிய அளவீடுகளை பெற்றுக்கொள்ளலும் பதிதலும்**

(நிறுத்தல், நீள /உயரங்களை அளவெடுத்தல், உயரத்துக்குரிய நிறையை அல்லது உடற்திணிவுச் சுட்டியை மதிப்பிடுதல், Hb% ஐ பரிசோதித்துப் பார்த்தல்)

பதிவின் பின் அடுத்த படியாக எல்லா சேவைபெறுநர்களினதும் போஷணைத் தரத்தை மதிப்பிடுவதற்காக உரிய அளவீடுகளைப் பெறவேண்டும் உம்:நிறுத்தல், நீள /உயரங்களை அளவெடுத்தல், உயரத்துக்குரிய நிறையை அல்லது உடற்திணிவுச் சுட்டியை மதிப்பிடுதல் ( BMI அட்டவணையைப் பயன்படுத்தி),Hb% ஐ பரிசோதித்துப் பார்த்தல்.

- பிள்ளைகளின் நிறை, நீள/ உயரங்களை சரியாக அளத்தல்- இணைப்பு 4 ஐ பார்க்க
- பிள்ளைகளின் அளவீடுகளை சரியாக பதிவு செய்தல்-இணைப்பு 5 ஐ பார்க்க
- பிள்ளைகளின் வளர்ச்சி வரைபுகளை சரியாக இனங்காணல்-6 ஐ பார்க்க
- பாடசாலை வயதுப் பிள்ளைகளின் போஷணைத் தரத்தை மதிப்பிடல்- இணைப்பு 7 ஐ பார்க்க
- கர்ப்பிணித் தாய்மாரின் போஷணைத் தரத்தை மதிப்பிடல்
    - நிறுத்தல்,உயரம் அளத்தல்,உடற் திணிவுச் சுட்டியை மதிப்பிடல் (உ.தி.சு. குறிப்பேட்டைப் பார்த்து)- இணைப்பு 8.1 ஐ பார்க்க
    - நிறை அதிகரிப்பு வரைபு - இணைப்பு 8.2 ஐ பார்க்க
- உபகரணங்களை பேணலும் செம்மையாக்கலும்- இணைப்பு 9 ஐ பார்க்க

**4.3 மருத்துவப் பரிசோதனை**

**4.3.1 உடலிலுள்ள சுகவீனத்தைக் கண்டறிவதற்கான மருத்துவப் பரிசோதனை (முதல் வருகையின்போது கட்டாயமாகவும் மீள் வருகைகளில் தேவைக்கேற்பவும்)**.

ஒரு போஷணைப் பிரச்சனைக்கு காரணமாயிருப்பது ஒரு மருத்துவப் பிரச்சனைக்கு இரண்டாம் பின்னணிக் காரணமாக இருக்கிறதா என்பதை அறிவதற்காக, முதல் வருகையின்போது எல்லா சேவை பெறுநர்களிடமும் விளக்கமான வரலாற்றைப்பெற்று , உடல்மற்றும் பிணியாய்வு பரிசோதனைகள், உரிய ஆய்வுகூடப் பரிசோதனைகள் அடங்கலான ஒரு முழுமையான மருத்துவப் பரிசோதனை நடாதத்தப்பட வேண்டும்

**4.3.2 முதல் வருகையின்போது போஷணைப் பிரச்சனைகளை சரியாக அடையாளம் காணல்**

இது பின்வருமாறு சு.வை.உ. / மே.சு.வை.உ. இனால் செயல்படுத்தப்படவேண்டியதாகும்.

- விபரமான வரலாற்றைப் பெற்றுக்கொள்ளல் (கடந்த 24 மணித்தியால உணவு நுகர்வு மீளாய்வு, உடல் தொழிற்பாடு மீளாய்வு, வீட்டில் உணவுப்பாதுகாப்பு, சமூக வரலாறு அத்துடன் 6 முக்கிய கரிசனைப் பழக்கங்கள் போன்றவை)
- வளர்ச்சி / போஷணை சம்பந்தப்பட்ட சுட்டிகளை விளங்கிக்கொள்ளல் (வயதுக்குரிய நிறை மற்றும் நீளம் /உயரம் ,நீளம்/உயரத்துக்குரிய நிறை) மற்றும் வளர்ச்சி வரைபு. உடற்திணிவுச் சுட்டியை விளங்கிக்கொள்ளல்)
- Hb% ஐ விளங்கிக்கொள்ளல். முழுமையான குருதிப் பரிசோதனை அறிக்கை (FBC) மற்றும் தொடர்புடைய ஆய்வு அறிக்கைகள்)
- முந்திய பிணியாய்வு நிலைய பதிவேடுகளை பரிசீலித்தல்
- சேவைபெறுநர் வைத்திருக்ககூடிய ஏனைய பதிவேடுகளை பரிசீலித்தல்

தலையீடுகளையும் அவற்றின் செயலாக்கங்களையும் முடிவு செய்தபின் (உளவளத்துணை உட்பட),எவ்வகை தொடர் கண்காணிப்புகள் தேவைப்படுகின்றன என்பதும் பரிசோதிக்கும் சு.வை.உ. அல்லது மே.சு.வை.உ. இனால் தீர்மானிக்கப்படல் வேண்டும். இந்த தீர்மானங்கள் சம்பந்தமான உரிய பதிவேடுகள் பேணுதலும் வெளிக்கள அலுவலர்கள் மூலம் தேவையான தொடர் கண்காணிப்பை மேற்கொள்ள ஒழுங்குபடுத்தும்படி பொ.சு.தா.சகோதரிக்கு அறிவித்தலும்கூட பரிசோதிக்கும் சு.வை.உ. அல்லது மே.சு.வை.உ. இன் பொறுப்புக்களாகும்.

ஒரு சேவைபெறுநருக்கு போஷணைப் பிரச்சனையும் அதே வேளை மருத்துவ காரணங்களும் இருக்குமாயின் சு.வை.உ. அல்லது மே.சு.வை.உ. அந்த இரண்டு பிரச்சனைகளையும் கவனத்திலெடுத்து மருத்துவ காரணங்களைக் கையாளும் முறைமையோடு ஒத்துப்போவதான போஷணைத் தலையீடுகளை செயற்படுத்த திட்டமிட வேண்டும். விசேட மருத்துவ ஆலோசனை/ கவனிப்பு தேவைப்படுமாயின் அவர்கள் பொருத்தமான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்புகளை எழுத பின்வருவனவற்றை பயன்படுத்துக

- பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப்பதிவேட்டில் குறித்து அனுப்புவதற்கான பக்கம்
- கர்ப்பிணித் தாய்மாருக்காகர் 512
- புதிதாய் மணம்முடித்த ஆண் அல்லது பெண்ணுக்கு, புதிதாய் மணம்முடித்த தம்பதியர்க்கான பரிசோதனை சரிபார்க்கை குறிப்பேட்டினை குறித்து அனுப்புவதற்கான பக்கம்.

போஷணைத் தரத்தை பாதிக்கவல்ல, பொருளாதார / உளசமூகக் காரணிகள் ஏதும் இருந்து, அவை முன்னைய தலையீடுகளின்போது திருத்தப்படாத/இனம் காணப்படாத நிலையில், தற்போது இனம்காணப்படின், சேவைபெறுநர் உதவிபெறும் பொருட்டு பொருத்தமான வகையில் குடும்ப உளவளத்துணை சேவை, சமூக சேவைகள் திணைக்களம் போன்றவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்

தேவைப்படும் வகையில் /வேளைகளில், மருந்துகளைக் குறித்துக் கொடுத்தல் சு.வை.உ மற்றும் மே.சு.வை.உ. வினது பொறுப்பாகும்.

சேவைபெறுநரைப் பரிசோதிக்கும் அலுவலரால் ஒவ்வொரு தடவை பரிசோதிக்கும் போதும் சேவைபெறுநரின் பதிவேட்டில் வளர்ச்சி/ போஷணைத்தரம், அதைத் திருத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை போன்றவை குறிக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.

- கடந்த 24 மணித்தியால உணவு நுகர்வை மீளாய்தல்--- இணைப்பு 10 ஐப் பார்க்க
- 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் போஷணைப் பிரச்சனைக்கான தலையீடுகள்- இணைப்பு 11 ஐப் பார்க்க
- உடல் அப்பியாச மீளாய்வு–பாடசாலை வயது மாணவர்கள்-இணைப்பு 12 ஐப் பார்க்க
- வீட்டு மட்டத்தில் உணவுப்பாதுகாப்பு -இணைப்பு 13 ஐப் பார்க்க
- கர்ப்பிணித் தாயொருவரின் போஷணைப் பிரச்சனைக்கான தலையீடுகள்- இணைப்பு 14 ஐப் பார்க்க

முதல் பிணியாய்வு நிலைய நாளன்று, உரிய பரிசோதனைகள் அனைத்தும் முடிந்த பின் நோய் நிதானிப்பு/போஷணைப் பிரச்சனை இனங்காணப்பட்டமை பற்றிய குறிப்புகள் சேவை பெறுநரின் பதிவேட்டின் முதல் பக்கத்தில் பரிசோதிக்கும் மருத்துவ உத்தியோகத்தரால் எழுதப்பட வேண்டும். இந்த நோய்நிதானிப்பு, போஷணை பிணியாயவு நிலைய பதிவேட்டில் 'அடையாளம் காணப்பட்ட போஷணைப் பிரச்சனைகள்' என்ற நிரலில் பதியப்பட வேண்டும்.

சேவை பெறுநரது இனங்காணப்பட்ட பிரச்சனைக் கையாள்கை தொடர்பில் எதிர்காலத் திட்டம், பிணியாய்வு நிலைய தொடர் வருகை (என்ன கால இடை வெளியில்)போன்றவற்றை முதல் வருகையின்போதே -அத்துடன் தேவைப்படுமிடத்து அதன் பின்னரும் -சு.வை.உ/மே.சு.வை.உ. தீர்மானிக்க வேண்டும்.

சு.வை.உ/மே.சு.வை.உ,சேவைபெறுநர் அடுத்த தடவை பிணியாய்வு நிலையத்திற்கு வரவேண்டிய திகதியை முடிவு செய்வதோடு அடுத்த பிணியாய்வு நிலைய வரவு வரைக்கும்பொ.சு.ம. / பொ.சு.ப ஆகியோரிடமிருந்து தொடர் கண்காணிப்பு தேவைப்படுமென்பதையும் அவரின் பதிவுப் புத்தகத்தில் குறித்துக்கொடுத்து அவரை பொ.சு.தா.ச.(அவர் இல்லையாயின் மே.பொ.சு.ம) இடம்,அப்பகுதி பொ.சு.ம. / பொ.சு.ப உடன் தொடர்பு கொண்டு தொடர் கண்காணிப்பு நிகழ்வதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக அனுப்ப வேண்டும்.

**4.5 பிணியாய் நிலையத்திற்கு அடுத்த வருகையின் போது போஷணைத் தரம் குறித்த தொடர் கண்காணிப்பு**

ஆரம்ப அளவீடுகள் எடுத்தபின் சேவை பெறுநர் சு.வை.உ/மே.சு.வை.உ. ஆல் பரிசோதிக்கப்பட வேண்டும்.அவர்,சேவைபெறுநரின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து அதற்கேற்ப தேவைப்பட்ட மாற்றங்களை முகாமைத்துவத் திட்டத்தில் ஏற்படுத்துவார்.

சிறிதளவாவது போஷணைத்தரத்தில் முன்னேற்றம் காணப்படுமாயின் அல்லது விதந்துரைக்கப்பட்ட மனப்பாங்கு மாற்றம் காணப்படுமாயின **முன்னேற்றம் '+'** என பதிக. ஒரு சேவை பெறுநரின் விதந்துரைக்கப்பட்ட மனப்பாங்கு மாற்றம் பிள்ளையொன்றின் உணவு ஊட்டல் பழக்கத்தில் ஏற்படுமாயின் அல்லது கொடுக்கப்படும் உணவு வகையில் இருக்குமாயின் அது உடன்பாடானதாகும். அப்படியான உடன்பாட்டு மாற்றம் ஏதும் நிகழவில்லையெனில்-உணவு ஊட்டல் பழக்கத்தில்,வளர்ச்சியில்,பேஷாக்கு தரத்தில்- அது **முன்னேற்றம் '–'** எனப்பதியப்பட வேண்டும்.

முன்னேற்றம் திருப்திகரமாக இருப்பின், சேவை பெறுநர் அம் முன்னேற்றத்திற்காக பாராட்டப்பட வேண்டும். அத்தோடு மேலும் வளர்ச்சி/போஷணைத் தரத்தில் சரியானதும் பொருத்தமானதுமான தலையீடுகளை முறைப்படி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அடுத்தபடியாக, மேலும் மாற்றம் பெற வேண்டியிருக்கும் மனப்பாங்கினை அடையாளம் கண்டு அதற்கான ஆலோசனையை வழங்குக.
- அடுத்த பிணியாய்வு நிலையத்திற்கு வருகை தர ஒரு திகதியை வழங்குக.
- சேவைபெறுநரை, முகாமைத்துவ திட்டப்படி அடுத்ததாக என்ன செய்வதென்ற தெளிவான விளக்கம் பெறுவதற்காக பொ.சு.தா.ச. இடம் அனுப்புக. பொ.சு.தா.ச இல்லாத பட்சத்தில் இப்பொறுப்பை மே.பொ.சு.ம../மே.பொ.சு.ப.விடம் தேவைக்கேற்ற வகையில் சு.வை.உ/மே.சு.வை.உ. கையளிக்கலாம்.

- எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லையெனில், சு.வை.உ./மே.சு.வை.உ. மீள்மதிப்பீடு செய்து, சேவைபெறுநரைப் பரீட்சித்து,
  - வளர்ச்சி/போஷணை தரத்தில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்றால் ஒரு சிறிதாவது விதந்துரைக்கப்பட்ட பழக்கங்களை நோக்கி நடத்தை மாற்றம் ஏற்பட்டுள்ளதா எனப் பார்த்து அதற்கேற்ப முகாமைத்துவத் திட்டத்தை மறு சீரமைக்க. எல்லா நடத்தை மாற்றங்களும் விதந்துரைக்கப்பட்ட வகையில் ஏற்பட்டிருந்தும் ஒரு மாதத்தின் பின்னரும் ( அல்லது குறித்த பிரச்சனைக்கேற்ற நியாயமான காலப்பகுதி) சேவைபெறுநரின் வளர்ச்சி/போஷணை தரத்தில் ஏதும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லையென்றால் அத்தகைய சேவைபெறுநர்

பொருத்தமான விசேட மருத்துவ பிரிவுக்கு (குழந்தை மருத்துவ/ மருத்துவ/சத்திரச்கிச்சை பிரிவுகள்) விசேடத்துவ கவனிப்புக்காக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- தொடர் கண்காணிப்புகளில் இதுவரை காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் தினசரிக் குறிப்புகள் சேவைபெறுநரின் பதிவுப் புத்தகத்தில் உரிய அலுவலரால் பதிவு செய்யப்பட வேண்டும்.

பொ,சு.தா.ச (அல்லது அவர் இல்லாத பட்சத்தில் மே.பொ.சு.ம./மே.பொ.சு.ப.) உரிய பகுதி வெளிக்கள அலுவலர்களுக்கு (பொ.சு.ம/பொசு.ப) அவர்கள் சேவைபெறுநரின் வெளிக்கள தொடர் கண்காணிப்பின்போது என்ன செய்ய வேண்டும் என்பதை அளிவிக்கும் ஒழுங்குகளுக்கு பொறுப்பாயிருப்பார்.

**4.6**

**4.6.1 குறித்துரைக்கப்பட்டபடி மேலதிக போஷணை உணவுகளை (திரிபோஷா, நுண்போஷணைப் பதார்த்தங்கள் போன்றவை) வழங்குதல்**

மேலதிக போஷணை உணவுகளான திரிபோஷா மற்றும் நுண்போஷணைப் பதார்த்தங்களை வழங்குவதுபொ.சு.ம/பொசு.ப. இன் பொறுப்பாகும்.

**4.6.2 குறிப்பிட்ட மருந்துகளை வழங்கலும் மருந்துக் கணக்குகள் சமப்படுத்தப்படும் பதிவேடுகளை பேணலும்**

சு.வை.உ/மே.சு.வை.உ இனால் மருந்துகள் குறித்துக் கொடுக்கப்பட பொ,சு.தா.ச அதை மருந்துக் கணக்குப் பதிவேட்டில் சேவைபெறுநரின் அடையாள இலக்கத்துடன் பதிவு செய்து ஏட்டைச் சமப்படுத்தல் வேண்டும். பாடசாலை செல்லாத பாடசாலை வயதுப் பிள்ளைகளின் பிணியாய்வு நிலையம் வேறு தினத்தில் நடைபெறும்போது அன்று இக்கடமைகள் பொ.சு.ப.இன் பொறுப்பாக இருக்கும்.

**4.7 விதந்துரைக்கேற்ப அடுத்த பிணியாய்வு நிலையத் திகதியை நிர்ணயித்து வழங்கல்**

சேவைபெறுநர் பிணியாய்வு நிலையத்தை விட்டு செல்லும் முன்பாக, அடுத்த பிணியாய்வு நிலைய வருகைக்கான திகதி (முன்பே விதந்துரைத்தபடி)அவரின் பதிவுப் புத்தகத்திலும் அதேவேளை போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேட்டிலும் பதியப்பட வேண்டும். சேவைபெறுநர் ஒரு தொடர் கண்காணிப்பின் பின்வருபவராக இருந்தால் அவரில் ஏற்பட்டிருக்கும்

முன்னேற்றம் (முன்பு செய்யப்பட்ட பிணியாய்வு மதிப்பீடுகளுக்கு அமைவாக) பிணியாய்வு நிலைய பதிவேட்டில், அதில் கடமை புரியும் பொ.சு.ம/பொசு.ப. இனால் பதியப்படவேண்டும்.

**4.8**

**4.8.1 போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேடு, பிணியாய்வு நிலைய நடவடிக்கைச் சாராம்சம் உட்பட அனைத்து பதிவுகளையும் பிணியாய்வு நிலைய வேளையின் முடிவில் நிறைவுபடுத்தல்**

புிணியாய்வு நிலைய பதிவேடு எவ்வாறு நிறைவு படுத்தப்படவேண்டும் என்பதற்கு பிரிவு 4.1 ஐயும் இணைப்பு 3 ஐயும் பாா்க்க.

### 4.8.2 பிணியாய்வு நிலைய தரவுகளை சுகநல முகாமைத்துவ தகவல் முறைமைக்குள் பதிவுசெய்தல் (HMIS)

ஒவ்வொரு பிணியாய்வு நிலைய வேளையின் முடிவிலும், பிணியாய்வு நிலைய வரவுப் பதிவேடு(H 517)மற்றும் பிணியாய்வு நிலைய சாராம்சம் (H 518) என்பன நிறைவுபடுத்தப்படவேண்டும். அன்று கடமைபுரியும் பொ.சு.ம/பொசு.ப. இனால் போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேட்டைப் பயன்படுத்தி தரவுகளான பிணியாய்வு நிலையத்திற்கு வந்தவா்கள் எண்ணிக்கை (முதல் வரவு மற்றும் தொடா் வரவுகள் தனித்தனியாக)விடுவிக்கப்பட்டவா்கள் (ஒவ்வொரு இலக்கு குழுவும் குறிக்கப்பட்ட விசேட குறியீட்டு இலக்கங்களின் கீழ் பதியப்படவேண்டும்.) ஒவ்வொரு காலாண்டின் முடிவில் இந்த விபரங்கள் காலாண்டு பிணியாய்வு நிலைய அறிக்கையில்( H 527) அதனைத் தயாா் செய்யும் பொ.சு.ம/பொசு.ப. இனால் பதியப்படவேண்டும்.

இத் தரவுகளுக்கு மேலதிகமாக போஷணைப் பிணியாய்வு நிலையத்தின் வருடாந்த மதிப்பீடொன்று செய்யப்பட்டு இத்தரவுகள் யாவும் வருடாந்த தரவுத்தாளில் பதியப்பட்டு குடும்ப சுகாதாரப் பணியகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**4.9 பிணியாய்வு நிலையத்தில் தமது முறை வரும்வரை காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவா்களது அபிவிருத்தித் தூண்டலுக்காக செயற்பாடுகள் ஒழுங்கு செய்தல்**

பொறுப்பு- பொ.சு.ம/பொசு.ப/தொண்டா்.

### 4.10 போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படல்

சேவைபெறுநரின் வளர்ச்சி/ போஷணைத்தரம் நல்ல முன்றேற்றத்தைக் காட்டுமாயின் (இரண்டு பிணியாய்வு நிலைய வருகைகளில் காணப்படும் முன்னேற்றம்) ஒரு சேவை பெறுநர் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படலாம்: அதேவேளை அந்த சேவைபெறுநரை மருத்துவ உத்தியோகத்தரொருவர் உள்ளூர் தாய்சேய் நலன்பேண்/கர்ப்பத்தின்முன் பிணியாய்வு நிலையத்தில் தொடர்கண்காணிப்புச் செய்ய ஒழுங்குபடுத்தியிருப்பதோடு, உரிய பொ.சு.ம./ பொ.சு.ப. வுக்கு கவனமாக தொடர் கண்காணிப்பு செய்யும்படி அறிவித்தல் வேண்டும். இவை கட்டாயமாக சு.வை.உ./மே.சு.வை.உ. இன் விதந்துரைக்கேற்பவே நடைபெற வேண்டும்.

பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படும்போது, எதிர்காலத்தில் சிறந்த வளர்ச்சி/போஷணை நிலைமைகளை பேண கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளுக்கான திட்டத்தை தீர்மானித்து அவற்றை சேவைபெறுநருக்கு தேவையான அறிவுறுத்தல்களுடன் விளக்குக. (இது சேவை பெறுநரின் பதிவுப் புத்தகத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.)

அத்துடன் அப்பகுதி பொ.சு.ம./பொ.சு.ப. ஆகியோருடன். தொடர்பு கொண்டு இந்த திட்டம் பற்றியும் செய்ய வேண்டிய தொடர் கண்காணிப்பின் வகை பற்றியும் பொ.சு.தா.சகோதரியால் (அவர் இல்லாதவிடத்து மே.பொ.சு.ம./மே.பொ.சு.ப.) குறிப்பிடப்பட வேண்டும்.

ஒரு சேவை பெறுநர் போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படும்போது சேவைபெறுர் பதிவுப் புத்தகத்தில் தெளிவாக 'D' என குறிப்பிடப்பட வேண்டும். போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேட்டில் சேவைபெறுநர் விடுவிக்கப்பட்ட திகதி தெளிவாக எழுதப்பட வேண்டும்.

குறிப்பு: அவ்வாறு விடுவிக்கப்படும் சேவைபெறுநர் மீண்டும் போஷணைப் பிணியாய்வு நிலையத்துக்கு வளர்ச்சி/போஷணைத்தர பிரச்சனை காரணமாக உள்ளூர் தாய்சேய்/கர்ப்பத்தின்முன் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களிலிருந்து அனுப்பிவைக்கப்படின் அவரைப் புதிய ஒருவராகப் புதிய அடையாள இலக்கத்தின்கீழ் பதியவேண்டும்.

### 4.11 வெளிக்களத்தில் தொடர் கண்காணிப்பு

போஷணை பிணியாய்வு நிலையத்தில் பரிசோதனை செய்யும் உத்தியோகத்தர் சேவைபெறுநரின் பதிவுப் புத்தகத்தில், சேவைபெறுநர் ஒரு குறித்த பிணியாய்வு நிலைய வருகைக்குப்பின் என்னென்ன செய்யவேண்டும் எனவும் பொ.சு.ம/பொ.சு.ப. வெளிக்களத்தில் மீண்டும் அவரைக் காணும்போது என்னென்ன செய்யவேண்டும் எனவும் குறிப்பிட வேண்டும். மேலும்,சேவைபெறுநர்

தமது பதிவுப் புத்தகத்தை அப்பகுதி பொ.சு.ம/பொ.சு.ப விடம் தாமதமின்றிக் காட்டவேண்டும் என்பதையும் அவருக்கு அறியத்தர வேண்டும்.

உரிய பொ.சு.ம/பொ.சு.ப .தமது சேவை பெறுநரை தொடர் கண்காணிப்புச் செய்து அவர் போஷணைப் பிணியாய்வு நிலையத்துக்கு சென்றாரா என்றும் அப்படியாயின் அவருக்கு என்னென்ன அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் பொ.சு.ம/பொ.சு.ப என்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் அறிய வேண்டும். இதற்காக சேவைபெறுநரின் போஷணைப் பிணியாய்வு நிலைய குறிப்பேடு மற்றும் போஷணைப் பிணியாய் நிலைய பதிவேடு அடங்கலான ஏனைய பதிவுகள் பரிசீலிக்கப்படுவதோடு குறித்த பிணியாய்வு நிலையத்தில் கடமை புரிந்த அலுவலர்களிடமிருந்து மேலதிக தகவல்கள் திரட்டப்படுதலும் வேண்டும். (தேவையாயின் சு.வை.உ./மே.சு.வை.உ. இடமிருந்தும்)

பொ.சு.மம.மற்றும் பொ.சு.பப. இந்த தொடர் கண்காணிப்பைத் தங்கள் சொந்தப் பொறுப்பாகக் கருதுதல் வேண்டும். வெளிக்களத்தில் சேவைபெறுநரைச் சந்திக்கும்போது, சேவை பெறுநரின் குறிப்பேட்டைப் பார்வையிட்டமை பற்றி உறுதிப்படுத்த அதில் குறிப்புகள் எழுதி கையெழுத்திட வேண்டும். போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவுப் புத்தகங்களிலுள்ள தரவுகள் பொ.சு.ம/பொ.சு.ப பேணும் உரிய அலுவலகப் பதிவுகளில் பதியப்பட வேண்டும் (உம்: பிள்ளையொன்றின் CHDR இன் 'B'பகுதி, கர்ப்பிணிப் பெண்ணொருவரின் கர்ப்பிணிப் பதிவு அட்டையின் 'B'பகுதி போன்றவை)


அதன்பின் பொ.சு.ம/பொ.சு.ப தேவையான தொடர் கண்காணிப்பை ஆரம்பித்து, சேவை பெறுநர் தமக்கு வழங்கப்பட்ட விதந்துரைகள் அனைத்தையும் அறிவுறுத்தியபடி பின்பற்றுகிறாரா எனப் பார்க்கவேண்டும். வழமையான போஷணை நிலை பற்றிய மதிப்பீடுகளும் செய்யப்படவேண்டும். ( உம்: பிள்ளையொன்றின் வீட்டு தரிசிப்பாயின், 24 மணித்தியால உணவு நுகர்வு மீளாய்வு செய்து விதந்துரைகளுக்கேற்ப மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்று பார்த்தல், நிறுத்தல், நீள/உயரம் அளத்தல்- தேவைப்படுமாயின்) பொ.சு.ம/பொ.சு.ப.வழமையான பதிவுகளிலும் அறிக்கைகளிலும் இந்தத் தொடர் கண்காணிப்பு குறிப்புகள் இடப்பட வேண்டும (உம்: தினக்குறிப்பேடு அல்லது சட்டைப்பை குறிப்புப் புத்தகம்,பொ.சு.ம .இன் பராமரிப்பிலுள்ள CHDR இன் 'B' பகுதி மற்றும் கர்ப்பிணிப் பெண்ணின் பதிவு அட்டையின்'B' பகுதி போன்றவை.) அத்துடன் பொ.சு.ம/பொ.சு.ப ஆல் செய்யப்பட்ட தொடர் கண்காணிப்பு மற்றும் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளின் சாராம்சம் சேவை பெறுநரின் குறிப்பேட்டில் குறிக்கப்படல் வேண்டும்.

## 5 ஒரு போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்குரிய வளங்களும் வசதிகளும்

- மனித வளங்கள்
    - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் / மேலதிக சுகாதார வைத்திய உத்தியோகத்தர்- 01
    - பொது சுகாதார தாதிச் சகோதரி -01 (இல்லாவிடில் மே.பொ.சு.ம.)
    - பொ.சு.ம. 02 (எல்லா பொ.சு.ம.க்களும் Roster ஒழுங்கில் கடமைப்பகிர்வு)
    - போஷணைப் பிணியாய்வு நிலையக் கடமைக்கு ஈடுபடுத்தப்படவேண்டும்
    - பொ.சு.ப. 01 (எல்லா பொ.சு. பரிசோதகர்களும் கடமைப்பகிர்வு ஒழுங்கில் (Roster)போஷணைப் பிணியாய்வு நிலையக் கடமைக்கு ஈடுபடுத்தப்படவேண்டும்
    - தொண்டர்

      (ஒரு நாளைக்கு வருகைதரும் சேவை பெறுநர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அல்லது சேவைத்தேவைகளின் அடிப்படையில் மனிதவளங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்)
- பிணியாய்வு நிலைய ஒழுங்கமைப்பு

  (1) பதிவு மேசை→ (2)காத்திருக்கும் பகுதி→ (3) நிறுத்தல்,நீள/உயரம் அளக்கும் பகுதி, உடற்திணிவுச் சுட்டி கணித்தல் மற்றும் HB% பரிசோதனை→ (4) பிணியாய்வு செய்தலும் போஷணை உளவளத் துணைச் செயற்பாடும்→ (5) மருந்து கொடுத்தல் மற்றும் அடுத்த திகதிகளை நிர்ணயித்து வழங்கும் பகுதி




- உபகரணங்களும் மருந்துகளும
    - நிறை, நீளம், உயரம் என்பன அளவிட விதந்துரைக்கப்பட்ட உபகரணங்கள்
        - குழந்தைகளுக்கான புயத்தராசு அளவீட்டு உபகரணம்
        - வயது கூடிய பிள்ளைகளுக்கான விற்றராசு
        - பெரியவர்களுக்கான புயத்தராசு

          இந்த உபகரணங்கள் மிகச் சரியான அளவீட்டைக் காட்டுவதற்காக கிரமமாக செம்மையாக்கல் செய்யப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும்

- நீளப்பலகை மற்றும் உயரத் துண்டம் (rod)/ பலகை
- கர்ப்பிணித் தாய்மார் மற்றும் வளர்ந்தோர்க்கான உடற் திணிவுச் சுட்டி குறிப்பேடு (chart)
- 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கான வளர்ச்சி வரைபுகளுடனான புத்தகம்- பாடசாலைப் பிள்ளைகளின் போஷாக்கு தரத்தை மதிப்பிடல் தொடர்பான வளர்ச்சிப் பதிவேடு

- ஈமோகுளோஷபினோ மானி (Haemoglobinometer)
- மேலதிக போணைக்கூறுகள் மற்றும் நுண்போஷணைப் பதார்த்தங்கள்
  - திரிபோஷா
  - விற்றமின்’A’ (பெரிய அளவு- )
  - இரும்புச்சத்து மாத்திரை / அயன்போலேற் (இரும்பு ூபோலிக் அமிலம்)
  - போலிக் அசிட் மாத்திரை
  - விற்றமின் C மாத்திரை
  - கல்சியம் மாத்திரை
  - பல்வகை நுண்போஷணைப் பதார்த்த பைக்கட்டுகள் (MMN வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைபெறும் மாவட்டங்களில்)
  - புழுச் சிகிச்சை (மெபெண்டசோல்)
  - சிங் பாணி/மாத்திரை (தேவைக்கேற்ப)
  - இரும்புச் சத்து பாணி (தேவைக்கேற்ப)
  - மருந்துகள் (இணைப்பு 15 ஐப் பார்க்க)
- பதிவுகளும் பதிவேடுகளும்
  - பிணியாய்வு நிலைய வரவுப் பதிவேடு (H 517)
  - பிணியாய்வு நிலைய சுருக்கக் குறிப்பு
  - போஷணைப் பிணியாய்வு நிலைய பதிவேடு
  - மருந்துகளின் கணக்கு சமப்படுத்தல் பதிவேடு
- தகவல்,கல்வி ஊட்டல்,தொடர்பாடல்- பொருட்கள் (IEC material)
  - பிளாஸ் அட்டைக் கூட்டம் - தாய்ப்பாலூட்டல்
  - 5 புத்தகங்களின் கூட்டம் - தாய்ப்பாலூட்டல்
  - பிளாஸ் அட்டைக் கூட்டம்-மேலதிக உணவு ஊட்டல்
  - பொ.சு.ம.மாதுக்கான பிளாஸ் அட்டைக் கூட்டம்- வளர்ச்சிக் கண்காணிப்பும் பிள்ளைகளின் மேம்பாடும்
  - சுவர் குறிப்புப்படங்கள் - மேலதிக உணவு ஊட்டல்
  - கையேடுகள்- மேலதிக உணவு ஊட்டல்

- பிளாஸ் அட்டைக் கூட்டம் - இளைஞருக்கான போஷணை
- பிலிப் குறிப்புப் படங்கள் - கர்ப்பகாலப் போஷணை
- வேறுபுதிதாய் வெளியிடப்பட்ட தகவல், கல்வி ஊட்டல், தொடர்பாடல்-பொருட்கள்-போஷணை

- தொடர்புறுவதற்குரிய புத்தகங்களும் ஆவணங்களும்
  - இலங்கையில் உணவின் அடிப்படையிலான உணவுக்கட்டுக்கோப்பு வழிகாட்டி
  - தாய் பராமரிப்பு--பொ.சு.ம.மாதுக்கான தாய் பராமரிப்பு கையேடு
  - கடுமையான தீவிர போஷாக்கு குறைபாடு- இலங்கையிலுள்ள சுகநலப் பணியாளர்க்கான வழிகாட்டி
  - இலங்கையில் தாய்ப்பாலூட்டலை மேம்படுத்தல், பாதுகாத்தல், ஒத்தாசை புரிதல் மற்றும் குறித்த தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் பற்றிய ஒழுங்குவிதிகள்
  - கர்ப்பமுன் பிணியாய்வு பராமரிப்பு சேவையின் முன் நிபந்தனைகள் பற்றி சுகநலப்பணியாளர்க்கான கையேடு
  - "குருவிக் குடும்பம் போல் குதூகலமான வாழ்வுக்கு .வாழ்த்துக்கள்."
  - போஷணை சம்பந்தமான சுற்றுநிரூபங்கள் மற்றும் தாய் சேய் நலன் சம்பந்தமான வழிகாட்டிகள்

**பிள்ளையின் போஷணை**

- சமூகத்திலுள்ள 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் மத்தியிலுள்ள போஷணைப் பிரச்சனைகளை கையாள்வதற்கான வழிமுறைகள்: பொதுச் சுற்று நிரூபம் இல.02-18/2008
- குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு உணவு ஊட்டல் மீதான வழிகாட்டி (2007)
- விற்றமின்'A'பாரிய அளவு (Mega Dose)மேலதிக சத்துவழங்கல்-திருத்திய அட்டவணை பொது சுற்றுநிரூபம் இல.01-05/2009
- சமூக அமைப்பில் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் புழுச்சிகிச்சை வழங்கலுக்கான வழிகாட்டி 2013-2016: பொதுச் சுற்றுநிரூபம் இல.02-172/2012
- 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் மதிதியிலான வயிற்றோட்டநோய் கட்டுப்படுத்தலில் மேலதிக 'நாகச் 'சத்துவழங்கல் (Zn supplementation)- பொதுச் சுற்று நிரூபம். இல.02-161/2013
- இலங்கையில் தாய்ப்பாலூட்டல் மேம்படுத்தல், பாதுகாத்தல், ஒத்தாசை புரிதல் மற்றும் குறித்த தயாரிப்புகளை சந்தைப்படுத்தலை பற்றிய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல்: பொதுச் சுற்றுநிரூபம் இல.01.15/2012

- அனாதைச் சிறுவர் அடங்கலாக குழந்தைகள் மற்றும் முன்பள்ளிச் சிறுவர்கள் (1-5 வயது) மற்றும் தாய்மாருடன் அவசரகால நிலைமையில் சேர்ந்து வாழாத சிறுவர்களது உணவு ஊட்டல் மீதான வழிகாட்டி
- அவசரகால நிலைமையில் பொருத்தமானதும் போதுமானதுமான குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுவதை உறுதி செய்தலும் அதற்கு ஒத்தாசை வழங்கலும்- பொதுசுற்றுநிரூபம் இல.01-11/2009
- பொதுச் சுற்று நிரூபம் இல.01-48/2012:தேசிய குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு உணவு வழங்கல் (IYCF)-சுகாதார நிலையங்களிலேயே தாய்ப்பாலூட்டல் வசதிகள்-தாய்ப்பாலூட்டல் அறைகளை நிறுவுதல்

**தாய்மை போஷணை**

- பொதுச் சுற்று நிரூபம் 02-85/2014
- பொதுச் சுற்று நிரூபம் 02-84/2014

**பாடசாலை வயதுப் பிள்ளையின் போஷணை**

- பொதுச் சுற்று நிரூபம் 02-08/2007(1):- பாடசாலை மாணவர்களுக்கு வாராந்தம் இரும்பு - போலேற் மேலதிகச் சத்து (WIFS )வழங்கல் - 2013 லிருந்து அமுலாக்கப்படுகிறது.

**மற்றையவை**

- சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் அத்தியாவசிய மருந்துகளின் பெயர்வரிசை-பொது சுற்று நிரூபம் இல.02-27/2011

## 6 போஷணைப் பிணியாய்வு நிலையத்தை கவனிக்கும் அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புக்களும்

### 6.6 பொதுச் சுகாதார மருத்துவமாது

- சேவை பெறுநரை வரவேற்றலும் (பொ.சு.ப. உடன் சேர்ந்து) இலக்கங்களை வழங்கலும ˙(இதற்கு ஒரு தொண்டரின் உதவி பெறப்படலாம்)
- சேவை பெறுநர்களை பதிவு செய்தல்
- தொடர்புடைய பதிவுகளையும் பதிவேடுகளையும் பேணல் (விசேடமாக சேவை பெறுநரைப் பதிவு செய்யும்போதும் அவரை விடுவிக்கும் போதும்)
  - பிணியாய்வு நிலைய வரவுப் பதிவேடு (H 517)
  - பிணியாயவு நிலைய சாராம்சம் (H 518)
  - சேவைபெறுநரின் பிணியாய்வு நிலைய பதிவுப் புத்தகமும் ஏனைய பதிவுகளும்

- போஷணை பிணியாய்வு நிலைய பதிவேடு

- போஷணை நிலையை மதிப்பீடு செய்தல்
  - நிறுத்தல் மற்றும் நீள/ உயர அளவீடுகள் எடுத்தல்
  - நீள/ உயரத்துக்கு நிறை அல்லது உடற் திணிவுச் சுட்டியை மதிப்பீடு செய்தல்
  - அளவீட்டு வாசிப்புகளை பொருத்தமான குறிப்பேடுகளில் அடையாளமிடலும் உரிய குறிப்புகளை இடலும்
  - தேவைப்படும்போது Hb% ஐ பாசோதித்தறிதல்.(வெளிக்கள தாய் சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களுக்கான விதந்துரைகளுக்கு ஏற்ப)
  - விருத்தி/போஷணை நிலையை என்பவற்றை மதிப்பீடு செய்தபின் சு.வை.உ./மே.சு.வை.உ. இடம் கவனிப்புக்காக அனுப்புதல்
- சு.வை.உ./மே.சு.வை.உ அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் பொருத்தமான இலக்கு குழுக்களுக்கு சுற்று நிரூபங்களுக்கு அமைவாக /வழிகாட்டிகளுக்கு எற்பமேலதிக போஷாக்கு உணவுகள் வழங்கல்
- சு.வை.உ./மே.சு.வை.உ அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நுண்போஷணைப் பதார்த்தங்கள் வழங்கல்.
- சு.வை.உ./மே.சு.வை.உ அவர்களின் விதந்துரைக்கு அமைய அடுத்த பிணியாய்வு நிலையத்திற்கு வருவதற்கான நியமனத் திகதிகளை வழங்குதல்.
- சு.வை.உ./மே.சு.வை.உ அவர்களின் தீர்மானப்படி சேவைபெறுநர் ஒருவருக்கு தொடர் கண்காணிப்பு அவசியமெனக் கருதப்பட்டால் அப்பகுதி பொ.சு.ம.க்கு அறிவித்தல் (பொ.சு.தா.ச. இன் உதவியுடன் தொலைபேசி ஊடாக.மாதாந்த அல்லது உள்ளக மாநாட்டின்போது)
- பிணியாய்வு நிலையத்தில் தமது முறை வரும்வரை காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவர்களது அபிவிருத்தித் தூண்டலுக்காக செயற்பாடுகள் ஒழுங்கு செய்தல் (தொண்டர்களின் உதவி இதற்கு பெறப்படலாம்)
- சேவைபெறுநரின் விசாரணைக்குரிய தகவல்களை வழங்குதல்
- சு.வை.உ/ மே.சு.வை.உ.வினால் அளிக்கப்படும் வேறு பொறுப்புகள்

**வெளிக்களத்தில் பொ.சு.ம.இன் தொடர் கண்காணிப்பு**

- பகுதி பொ.சு.ம தனது பகுதியிலிருந்து சேவைபெறுநர் போஷணைப் பிணியாய்வு நிலையத்திற்கு குறித்தனுப்பப்பட்ட பின் உண்மையில் அவர் அங்கு சென்றாரா என்பதை விசாரிக்க வேண்டும். ஆவர் அங்ஙனம் சென்றிருப்பின் அங்கு விதந்துரைக்கப்பட்டவற்றை கைக்கொள்கிறாரா என்பது போன்ற விடயங்களை பொருத்தமானவகையில் தனது

நாளாந்த குறிப்புப் புத்தகத்தின் பதிவுகளிலும் ஏனைய தொடர்புள்ள ஏடுகளிலும் பதிந்து பேணி வரவேண்டும்.

- சேவைபெறுநரின்வளர்ச்சி / போஷணைத் தரம் என்பன முன்னேறிவருகையில் அவர் சாதாரண நிலைமையை அடைந்தமையால் போஷணை பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டபின், பிணியாய்வு நிலையத்தில் குறிப்பிட்டபடி பொ.சு.மருத்துவமாது தொடர் கண்காணிப்பு செய்ய வேண்டும். உம்: தாய் சேய் நலன் பேண் பிணியாய்வு நிலையத்தில், வெளிக்கள நிறை பார்க்கும் நிலையங்கள் மற்றும் வெளிக்கள தரிசிப்புகளின்போது பிள்ளைகள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுதல் அவர்களின் போஷணைத்தலையீட்டின் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கு கட்டாய தேவையாகும்.

### 6.7 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

- சேவை பெறுநர்களை வரவேற்றல் (பொ.சு.ம.வுடன் சேர்ந்து) இலக்கங்களைக் கொடுத்தல் (தொண்டர் ஒருவரின் உதவி பெறப்படலாம்.)
- சேவை பெறுநர்களை பதிவு செய்தல்
- உரிய பதிவுகளையும் ஏடுகளையும் பேணல் ( விசேடமாக சேவைபெறுரின் பதிவின் போதும் அவர் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படும்போதும்)
    - பிணியாய்வு நிலைய வரவுப் பதிவேடு (H 517)
    - பிணியாய்வு நிலைய சாராம்சம் (H 518)
    - சேவைபெறுநரின் பிணியாய்வு நிலைய பதிவுப் புத்தகமும் ஏனைய பதிவுகளும்
    - போஷணை பிணியாய் நிலைய பதிவேடு
    - மருந்து கணக்கைச் சமப்படுத்தல் பதிவேடு
- போஷணை நிலைமையை மதிப்பீடு செய்தல்
    - பாடசாலை வயது பிள்ளைகளின் நிறை மற்றும் நீள/ உயர அளவீடுகள் எடுத்தல்
    - உடற் திணிவுச் சுட்டியை மதிப்பீடு செய்தல்

    - அளவீட்டு வாசிப்புகளை பொருத்தமான குறிப்பேடுகளில் அடையாளமிடலும் உரிய குறிப்புகளை இடலும் ( இது உரிய வழிகாட்டியில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய செய்ய வேண்டும்)
    - தேவைப்படும்போது Hb% ஐ பாசோதித்தறிதல்.(வெளிக்கள தாய் சேய் நலன்பேண் பிணியாய்வு நிலையங்களுக்கான விதந்துரைகளுக்கு ஏற்ப)

- பாடசாலை வயதுப் பிள்ளையுடனும் பெற்றோருடனும் கதைத்து கடந்த 24 மணித்தியால உணவு நுகர்வு மீளாய்வு, உடல் அசைவுச் செயற்பாடுகள் மீளாய்வு மற்றும் வீட்டில் உணவுப் பாதுகாப்பு முறைகள் பற்றிய தகவல்களை பாடசாலை வயதுப் பிள்ளைகளிடமிருந்து திரட்டல்.
- வளர்ச்சி/போஷணை மதிப்பீட்டின் பின் சேவைபெறுநரை சு.வை.உ./ மே.சு.வை.உ. விடம் அனுப்புக

- சுற்று நிரூபங்கள், வழிகாட்டிகள் மற்றும் சு.வை.உ./ மே.சு.வை.உ. இன் அறிவுறுத்தல் என்பவைக்கேற்ப மேலதிக போஷணை உணவுகளை குறித்த இலக்கு குழுக்களுக்குவழங்குதல்
- சு.வை.உ./ மே.சு.வை.உ. குறிப்பிட்டபடி மருந்துகளையும் நுண் போஷணைப் பதார்த்தங்களையும் வழங்கல்
- பாடசாலை வயதுப் பிள்ளகளுக்கும் அவர்கள் பெற்றோருக்கும் 24 வார இரும்பு போலேற் மேலதிக சத்துக்கள் வழங்கல்பற்றி அறிவு ஊட்டுக.
- சு.வை.உ./ மே.சு.வை.உ அவர்களின் விதந்துரைக்கு அமைய அடுத்த பிணியாய்வு நிலையத்திற்கு வருவதற்கான நியமனத் திகதிகளை வழங்குதல்.
- சு.வை.உ/மே.சு.வை.உ அவர்களின் தீர்மானப்படி சேவைபெறுநர் ஒருவருக்கு தொடர் கண்காணிப்பு அவசியமெனக் கருதப்பட்டால் அப்பகுதி பொ.சு.ப.க்கு அறிவித்தல் (பொ.சு.தா.ச. இன் உதவியுடன் தொலைபேசி ஊடாக. மாதாந்த அல்லது உள்ளக மாநாட்டின் போது)
- சு.வை.உ / மே.சு.வை.உ. இனால் ஒதுக்கப்பட்ட வேறு ஏதாவது பொறுப்புக்கள்

**வெளிக்களத்தில் பகுதி பொ.சு.ப. ஆல் தொடர்கண்காணிப்பு**

- பகுதி பொ.சு.ப. தனது பகுதியிலிருந்து சேவைபெறுநர் போஷணைப் பிணியாய் நிலையத்திற்கு குறித்தனுப்பப்பட்ட பின் உண்மையில் அவர் அங்கு சென்றாரா என்பதை விசாரிக்க வேண்டும்.அவர் அங்ஙனம் சென்றிருப்பின் அங்கு விதந்துரைக்கப்பட்டவற்றை கைக்கொள்கிறாரா என்பது போன்ற விடயங்களை பொருத்தமானவகையில் தனது சட்டைப்பை குறிப்புப் புத்தகத்தின பதிவுகளில் பதிந்து பேணி வரவேண்டும். வெளிக்களத் தொடர் கண்காணிப்பு ஒரு பெண் பிள்ளை மீதானதாயின் அவர் அப்பகுதி பொ.சு.ம.வின் ஒத்தாசையைப் பெறவேண்டும்.
- வளர்ச்சி/ போஷணைத்தரம் எண்பவை நன்கு முன்னேற்றமடைதல் / சாதாரண நிலைக்கு வந்தமையின் பேரில் சேவைபெறுநர் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட அப் பகுதி பொ.சு.ப. போஷணைப் பிணியாய்வு நிலையத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய வெளிக்கள தொடர் கண்காணிப்பை மேற்டிகொள்வார். உ.ம்:.

அவர்கள் தலையீடுகளின் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கு தொடர்ச்சியான தொடர் கண்காணிப்பு கட்டாயமானது

**6.8 மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்**

- மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
- பொ.சு.பரிசோதகர்களின் நிறுத்தல் உயரம் அளத்தல் மற்றும் உடற் திணிவுச் சுட்டி கணக்கிடுதல் பற்றிய அறிவையும் திறனையும் மதிப்பிடல்

**6.9 மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது**

- பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர் போஷணைப் பிணியாய்வு நிலையத்தில் இல்லாதவிடத்து அவர் கடமைகளைக் கவனித்தல்
- பொ.சு.ம. மாதுக்களை மேற்பார்வை செய்தல்
- வளர்ச்சி/ போஷணைத் தரம் மதிப்பிடல், போஷாக்கு கண்காணிப்பும் மேம்பாடும் என்பவற்றில் பொ.சு.மருத்துவ மாதர்களிடையேயுள்ள அறிவு மற்றும் திறன்களை மதிப்பிடலும் மேம்படுத்தலும்.

**6.5 பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர்**

- போஷணைப் பிணியாய் நிலையத்தின் முறையான முகாமைத்துவத்தை உறுதி செய்தலும் மேற்பார்வையிடலும்
- வளர்ச்சி/போஷணைத் தரம் மதிப்பிடல், போஷாக்கு கண்காணிப்பும் மேம்பாடும் என்பவற்றில் பொ.சு.மருத்துவ மாதர்களிடையேயுள்ள அறிவு மற்றும் திறன்களை மதிப்பிடலும் மேம்படுத்தலும்.
- சு.வை.உ./மே.சு.வை.உ. ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய தொடர் கண்காணிப்பு பிணியாய்வு நிலைய வருகையின்போது போஷணை மீதான ஆலோசனைகளை சேவை பெறுநருக்கு வழங்கல்
- போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, தொடர் கண்காணிப்பு பெறவேண்டிய சேவை பெறுநர்களின் பகுதி பொ.சு.ப. மற்றும் பொ.சு.ம. ஆகியோர்க்கு அறிவிக்க ஒழுங்கு செய்தலும் அவை குறிப்பிட்டபடி நடைபெறுவதைஉறுதிப்படுத்தலும்
- குறிப்பிடப்பட்ட மருந்துகளை வழங்கலும் மருந்துக் கணக்கு பதிவேட்டைப் பேணலும்
- போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, தொடர் கண்காணிப்பு பெறவேண்டிய சேவை பெறுநர்களின் பகுதி பொ.சு.ப. மற்றும் பொ.சு.ம. ஆகியோர்க்கு அறிவித்தல்

**போஷணை பிணியாய்வு நிலைய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக:**

- திட்டமிட்டபடி போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து அனுப்பப்படுகின்றவைகள் நடைமுறைப்படுத்தப்படுவதையும் போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுபவர்களின் தொடர் கண்காணிப்பு அறவுறுத்தியபடி நடைபெறுகிறதா என்பதையும் உறுதிப் படுத்தல்.
- குழந்தைகளினதும் 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளினதும் பாடசாலை வயதுப் பிள்ளைகளினதும் பராமரிப்பிலுள்ள கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மாரினதும் அவரின் பகுதியிலுள்ள எல்லா பொ..சு.ம.பகுதிகளிலுள்ள புதிதாய் மணம்முடித்த தம்பதிகள் ஆகியோரின் போஷணை/வளர்ச்சி நிலைகளை கண்காணிப்பதற்கு சு.வை.உ./மே.சு .வை .உ.க்கு உதவி புரிதல்.
- பொ.சு.ம.களின் போஷணைக் கல்வி அறிவும் தொடர்பாடல் திறனும் மிக அவசியம். ( விசேடமாக வளரிளம் பருவத்தினரோடு தொடர்பாடல் கொள்ளும்போது) ஆகவே இதனை நன்கு மேற்பார்வை செய்து அவர்கள் திறனை மேம்படுத்த வேண்டும். இந்தச் செயற்பாட்டிற்கு சுகாதாரக் கல்வி உத்தியோகத்தரின் உதவி பெறப்படலாம்.

**சுகாதார வைத்திய உத்தியோகத்தர்/மேலதிக சுகாதார வைத்திய உத்தியோகத்தர்**

- போஷணைப் பிணியாய்வு நிலையத்துக்கு வரும் எல்லா சேவை பெறுநர்களதும் முதல் வருகையின் போதும் மேலதிக வருகையின் போதும் வைத்தியப் பரிசோதனை மற்றும் பிரச்சனை இனம்காணல் ஆகிய செற்பாடுகளைச் செய்தல்
- தலையீடுகளையும் முகாமைத்துவ திட்டத்தையும் முடிவு செய்தல்,செயற்படுத்தல் (உளவளத்துணை உட்பட)மற்றும் வெளிக்களத்தில் வேண்டியிருப்பின் எவ்வகை தொடர் கண்காணிப்பு தேவைப்படும் என்பதைத் தீர்மானித்தல்-முதல் பிணியாய்வு நிலைய வருகை மற்றும் மீள் வருகைகள்-
- ஒரு சேவைபெறுநருக்கு ஒரு போஷணைப் பிரச்சனை இருக்கையில் தொடர்புபட்ட மற்றொரு மருத்துவப் பிரச்சனையும் இருப்பின் போஷணைத் தலையீடுகள் இரண்டு நிலைகளுக்கும் ஏற்றதாய் அமைய வேண்டும்.தேவைப்படின் விசேட வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைக்கலாம்.
- மருந்துகளை தேவைப்படும்வகையில் குறித்துக் கொடுத்தல்
- பொ.சு.தா.ச. இன் சேவை பெறுநருக்கு விசேட ஆலோசனை தேவைப்படின் அந்த ஆலோசனைகளை எவ்விதம் வழங்குவதென அவருக்கு அறியத்தரல். பொ.சு.தா.ச.க்கு வெளிக்கள தொடர் கண்காணிப்பை ஒழுங்குபடுத்தும்படி அறிவித்த அவருக்கு அறியத்தரல். பொ.சு.தா.ச.க்கு வெளிக்கள தொடர் கண்காணிப்பை ஒழுங்குபடுத்தும்படி அறிவித்தல்.

- போஷணைப் பிணியாய்வு நிலையத்திலிருந்து ஒரு சேவைபெறுநர் எப்போது விடுவிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.

**போஷணை பிணியாய்வு நிலைய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக:**

- முழு நிகழ்ச்சித் திட்டத்தையும் மேற்பார்வை செய்தல், தரத்தை உறுதி செய்வதற்காக தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்,மற்றும் இத் தரவுகளை நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிட பயன்படுத்தல்,: அதாவது சு.வை.உ. இன் பகுதியிலுள்ள போஷணைப் பிரச்சனைகளை மீளாய்வு செய்தல்,பொ.சு.ம. பகுதி மட்டத்தில் இதற்கான காரணங்களை இனங்காணல்,தலையீடுகளை முடிவு செய்தல், தலையீடுகளை செயலாக்கல், அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை இனங்காணல், சு.வை.உ. பிரிவிலுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்,தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல், அலுவலர்களை வேலைகளுக்கு ஈடுபடுத்தல் போன்றவை.
- தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்பார்வையும் புரிவதுடன் அவர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி போஷணை பற்றிய அறிவையும் திறனையும் அலுவலர் மத்தியில் வளர்த்தல் ( உம்: தொடர்பாடல் திறன்கள்).இந்தச் செயற்பாட்டிற்கு சுகாதாரக் கல்வி உத்தியோகத்தரின் உதவி பெறப்படலாம்.
- அலுவலர் குழாத்தின் போஷணை மீதான அறிவு மற்றும் திறன்களை (உம்: தொடர்பாடல் திறன்கள்) தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை மூலமாகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு படுத்துவதன் மூலமாகவும் வலுப்படுத்தல். இதற்கு சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்களின் உதவி பெறப்படலாம்.

## 7. போஷணைப் பிணியாய்வு நிலைய செயலாற்றுகைகளின் மதிப்பீடு

எல்லா மேற்பார்வை உத்தியோகத்தர்களும் (மே.சு.வை.உ,பொ.சு.தா.ச.,மே.போ.சு.ப., மே.பொ.சு.ம) சு.வை.உத்தியோகத்தரின் வழிகாட்டுதலுக்கமைய போஷணைப் பிணியாய்வு நிலைய செயற்பாடுகளை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்ய வேண்டும். இக் கூட்டத்தின் போது மதிப்பீட்டின் வெளிப்பாட்டுக்கமைய பொதுச்சுகாதார அலுவலர் குழாமுக்கு அவர்களது செயலாற்றுகை பற்றியும் போஷணைப் பிணியாய்வு நிலைய நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும் .

**சாராம்சம்:- போஷாக்குப் பிரச்சனையுடன் அனுப்பி வைக்கப்பட்டவருக்கு போஷணைப் பிணியாய்வு நிலையத்தில் வழங்கப்படும் கவனிப்புக்கள்**

